**கம்பஹா பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பஹா பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்களை கணக்குகளில் வைப்பதற்குரிய கணக்குக் கொள்கையொன்று இனங்காணப்படாதிருந்துடன், கணக்கீடு செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த பெறுமதி, சொத்துக்களின் தன்மை மற்றும் ஆயுட்காலம் என்பவற்றின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை கணக்கு வைப்பதற்காக கணக்கீட்டு கொள்கையொன்று இனங்காணப்பட வேண்டும். | நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. அது முடிவடைந்ததன் பின்னர் நிலையான சொத்துக்கள் தொடர்பான கணக்கீட்டு கொள்கையொன்றை தயாரித்து அதன் பிரகாரம் கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயற்திட்ட நிதி ஏற்பாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட | சரியாக கணக்கீடு செய்யப்பட | 2020 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| ரூபா 1,166,100 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 390,457,697 ஆக இருந்த போதிலும், பட்டோலையின் பிரகாரம் மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 185,324,215 ஆனமையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 205,137,246 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளின் மீதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலும் பதிவேடுகள் பரீட்சிக்கப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிலையான சொத்துக் கணக்குகளின் கூட்டுத்தொகைக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 4,493,001 வேறுபாடு காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இது கம்பெக்டர் இற்கான கடன் பணத்தின் மீதியாகும். |

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் காணப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 340,699,313 கூட்டுத் தொகையான 05 நிலையான சொத்துக் கணக்குகளின் மீதிகளுக்குரிய முறையாக பேணப்பட்ட பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்களின் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | சொத்துப் பதிவேடுகளை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவையாக இருந்த முற்பணமாக பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 784,000 மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 45,225,956 தொகையான கடன்பட்டோர் மீதியில் 3–5 வருடங்களுக்கு இடையிலான காலத்திற்குரிய தொகை ரூபா 2,667,712 ஆக இருந்ததுடன், ரூபா 94,276,793 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் 3 – 5 வருடங்களுக்கு இடையிலான காலத்திற்குரிய ரூபா 11,113,413 காணப்பட்டது. | அறவிட வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கும், செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1940 இன் 30 ஆம் இலக்க மதிப்பீட்டு சட்டம் | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதன வரி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2002 இன் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய ரூபா 33,944 தொகையான 11 காசோலைகளுக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காசோலைகளின் பெறுமதியை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 442,954 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வைப்பு பணத்தை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,580,454 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 83,695,147 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 16,132,100 | 20,340,931 | 19,307,359 | 37,167,279 | 18,539,500 | 18,600,577 | 17,198,554 | 36,354,071 |
| (ii) | வாடகை | 9,010,500 | 7,759,181 | 7,878,707 | 2,636,692 | 9,629,200 | 8,055,013 | 9,255,499 | 3,289,138 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,401,000 | 723,676 | 724,676 | - | 1,351,000 | 770,490 | 1,267,717 | 1,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 203,158,400 | 98,000,000 | - | 137,092,471 | 92,750,600 | - | 2,838,900 | - |
| | | 229,702,000 | 126,823,788 | 27,910,742 | 176,896,442 | 122,270,300 | 27,426,079 | 30,560,670 | 39,644,209 |

### 2.2.1 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஹெனரங்கொட உப அலுவலகத்தில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 12.8 மில்லியன் மற்றும் கலஹிட்டியாவ உப அலுவலகத்தில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 5.2 மில்லியன் நிலுவை மீதிகள் காணப்பட்டன. | ஆதன வரி அறவிடும் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை மீதியில் காணப்படும் குறைபாடுகளை மாற்றியமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை தற்போது அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.2 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை அதிகார பிரதேசத்திவ் தொலைபேசி கோபுரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஆதன வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை அதிகார பிரதேசத்தில் சகல தொலைபேசி கோபுரங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | ஹெனரங்கொட உப அலுவலகம் தவிர ஏனைய அலுவலகங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு ஆதன வரி அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2020 சனவரி 09 ஆம் திகதி வரையிலும் 24 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக் கொள்வதற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்காதிருந்ததுடன், சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் சபை அதிகார பிரதேசத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வியாபாரங்கள், கைத்தொழில்கள் தொடர்பாக மெய்மெய்யாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெறவேண்டிய வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 15 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | தேவையான உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | உப விதியினை விதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 9,380,000 தொகையான 08 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனேகமான நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |

### (இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) சபை அதிகாரப் பிரதேசத்தில் தினமொன்றுக்கு உக்கும் கழிவுகள் 10 – 15 தொன் ஆக இருந்ததுடன், உக்காத கழிவுகள் 3 – 6 தொன் அளவாக உருவாகியிருந்ததுடன், கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 14 மில்லியனுக்கு மேற்பட்ட செலவின | முறையாக கழிவுப் பொருட்களை அகற்றும் திட்டமுறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கழிவுப் பொருள் தளமொன்றை ஸ்தாபிப்பதற்காக பொருத்தமான காணியொன்றை கொள்வனவு செய்தல் கூட்டுப் பசளை தளமொன்றை நிர்மானித்து உக்கும் கழிவுகளுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பொன்று செய்யப்பட்டிருந்தது. எனினும், கழிவுப் பொருட்களுக்காக விலையொன்றை பெற்றுக் கொள்வதற்கும், முறையாக கழிவுப் பொருட்களை அகற்றும் திட்ட முறையையொன்றை தயாரிப்பதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | கூட்டுப் பசளை உற்பத்தியின் மூலம் விலையொன்றை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை முறையானதாக கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு உரிய இயலுமை காணப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | அதிகாரப் பிரதேசத்தில் 08 நவீன விற்பனைக் கடைகளுக்கு அதிக எண்ணிக்கையிலும் ஏனைய நிறுவனங்களில் இருந்தும் நாளாந்தம் கழிவுப் பொருட்களை வழங்கியிருந்த போதும், கழிவுக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உருவாகின்ற கழிவுப் பொருள் அளவின் பிரகாரம் கழிவுப் பொருளின் அடிப்படையில் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) பொதுமக்கள் முறைப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடப்பாண்டில் இறுதி வரையிலும் 224 பொதுமக்கள் முறைப்பாடுகள் கலஹிட்டியாவ உப அலுவலகத்திற்கும், 144 முறைப்பாடுகள் ஹெனரங்கொட உப அலுவலகத்திற்கும் கிடைத்திருந்ததுடன் அதில் முறையே 96 முறைப்பாடுகள் மற்றும் 57 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுமக்கள் முறைப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனேகமான முறைப்பாடுகள் அழைக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் போது இணக்கப்பாட்டிற்கு வராமையின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதார செயற்பாடுகளை | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு | 2020 ஆம் ஆண்டு முதல் அதன் வெற்றிகரமான இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியுமாக உள்ளது என அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| கட்டியெழுப்புவதற்காக நீண்ட கால திட்டம் 2019 – 2023 தயாரிக்கப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டில் உரிய நோக்கங்களை அடைந்து கொள்ளும் செயல்முன்னேற்ற சதவீதம் 50 சதவீதமாக இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடப்பாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர் எண்ணிக்கையில் 07 வெற்றிடங்களும், 02 மிகையும் காணப்பட்டன. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கும் மிகையினை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 07 வெற்றிடங்கள் மற்றும் 02 மிகைகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்கின்றோம். |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இடம்மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து ரூபா 600,840 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன், அதில் 05 நிலுவை மீதிகளுக்குரிய ரூபா 298,436 தொகை அறவிட வேண்டிய காணப்பட்டது. | அறவிட வேண்டிய ஊழியர் கடன் விரைவாக அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளுராட்சி அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து கிடைத்த பெறுமதி இனங்காணப்படாத 02 வாகனங்களை உள்ளடக்கிய ரூபா 48,663,157 பெறுமதியான 11 வாகனங்கள் 2019 மே 18 ஆம் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3.2 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மெய்மெய்யாய்வு சபைக்கு சமர்ப்பிக்காத ஹெனரங்கொட பொது நூலகத்தின் 602 புத்தகங்கள் மற்றும் கலஹிட்டியாவ பொது நூலகத்தின் 187 புத்தகங்கள் காணப்பட்டன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.4 பெறுகைகள்

### 3.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,968,725 தொகையான அலுவக உபகரணங்கள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சகல கொள்வனவுகளும் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | இது தவறுதலாக ஏற்பட்டிருந்தது. |